கருவூலகணக்குதுறை

அனுப்புநர்.
திரு. அமர் குஷாவா, I.A.S.,
மாவட்ட ஆட்சியர்,
ஆட்சியரகம்,
திருப்பத்தூர்.

பெறுநர்.
அனைத்துபட்டியல்கள்
கேட்புசெய்திடும் அலுவலர்கள்,
திருப்பத்தூர் மாவட்டம்.

ந.க. 94 / 2022 ஆநாள் 23/03/2022

ஐயா/ அம்மா

பொருள்: மார்ச் 2022 - பட்ஜெட் - நிதிஒதுக்கீடுசெய்தல் -பட்டியல்கள் - தயாரித்தல் மற்றும் கருவூலத்தில் கேட்புசெய்தல்நிதி ஒதுக்கீட்டினை நிலுவையின்றி முடிவிற்குகொணர ஏற்பாடுகள் மேற்கொள்ளல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசுகடிதம் 1787/ FS / Finance ( Salaries ) /2021 நாள் 14/12/2021
2. ஆணையர், கருவூலகணக்குதுறை, சென்னை அவர்களின் கடிதம். ந.க. 10784/டி2/2022 நாள் 17/03/2022.
3. கருவூலகணக்குதுறைஆணையர் அவர்களின் அறிவுரைகள் - காணொளிஆய்வு கூட்டம் - நாள் 23/03/22.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ளதிருப்பத்தூர், ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி ஆகிய சார்நிலைகருவூலங்களில் பட்டியல்களை கேட்புசெய்திடும் அலுவலர்கள் அனைவரும்,(Budget Controlling Officers ) தங்களுக்கு 2021 -2022 ஆம் நிதியாண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அனைத்து இனங்களுக்கான நிதிகளை உடன் சார் அலுவலர்களுக்கு ஒதுக்கீடுகள் (DDOs and Subordinates ) செய்தும், மேலும் அதற்கான பட்டியல்களை சார் அலுவலகங்களில் தயார் செய்து, தொடர்புடைய சார்நிலை கருவூலங்களுக்கு 25/03/2022 ஆம் தேதிக்குள் கேட்பு செய்திடவும் அனைத்து பட்டியல்கள் கேட்பு செய்திடும் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கிட, பார்வையில் காணும் அரசுகடிதம் வாயிலாகவும், இன்று 23/03/2022 அன்றுநடைபெற்ற காணொளி கூட்டத்தில் ,கருவூலகணக்குதுறை ஆணையர் அவர்களும் அறிவுருத்தியுள்ளார்கள்.

மேலும்8443 00 106 AA தலைப்பின் கீழ் வரும் தன்வைப்பு நிதி கணக்குகளை (PD ACCOUNT ) பராமரித்துவரும் அலுவலர்கள், தங்களது தன்வைப்புநிதி கணக்குகளுக்கான தொகைகளை 31/03/2022 ஆம் தேதிக்குள் முடிவிற்கு கொணரவும், எஞ்சியநிலுவை தொகையினை அரசுகணக்கில் செலுத்திடவும் அறிவுருத்தப்பட்டுள்ளது.

அதுபோலவே அனைத்து வகையிலான வைப்புநிதிகணக்குகளை காசாக்கிட வழங்கப்படும் PAYMENT ADVICE களை 31/03/2022 தேதிக்குள் முடிவிற்கு கொணர அறிவுருத்தியுள்ளார்கள்.

மேலும் கருவூலத்தில் கேட்புசெய்யப்படும் பட்டியல்கள் குறிப்பிட்டதேதிக்குள் காசாக்கம் செய்யப்படாமலோ, அல்லது பட்டியல்களுக்கான விதிகளுக்கு உட்பட்டுபட்டியல்கள் தயாரிக்கப்படவில்லை என்ற நிலையிலோ தணிக்கை செய்யப்பட்டால், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள் செலவினதொகையாக அரசுகணக்கில்

பதிவாகாது. எனவே அவ்வாறு தணிக்கையாகமல் பட்டியல்களைஏற்பளிப்புசெய்திடும் வகையில் சரியானவகையில் பட்டியல்களை தயாரிக்க தொடர்புடைய பணியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கிடவும் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

IFHRMSல் இதுவரையில் நிலுவையில் உள்ளECS RETURN தொகையினை உடனடியாக காசாக்கம் செய்திடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. அவ்வாறு 31/03/2022 தேதிக்குள் காசாக்கபடாமல் இருக்கும் பட்சத்தில், இணையத்தில் தானாகவே அரசுகணக்கில் வரவுவைக்கப்படும் என்பதனையும் தெரிவிக்கலாகிறது.

எனவே அதன் பொருட்டு,திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள அனைத்துசார் அலுவலர்களுக்கு நிதிஒதுக்கீடு செய்திடும் அலுவலர்களும், கருவூலத்தில் பட்டியல்கள் கேட்புசெய்திடும் அலுவலர்களும், மற்றும் தன் வைப்புநிதிகணக்கு உட்பட அனைத்து வகையிலான வைப்புநிதிகணக்குகளை பராமரிக்கும் அலுவலர்களும் ,2021-2022 நிதிஆண்டின் நிதிஒதுக்கிடுகளை நிலுவையின்றி முடிவிற்கு கொணர கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

23.3.2022

மாவட்ட ஆட்சியருக்காக
திருப்பத்தூர்.

23.3.22